# LIVELIHOOD CHALLENGES FACED BY THE RELOCATEDCOMMUNITIES: A SOCIOLOGICAL PERSPECTIVE ON NALLIKAKAPURAM VILLAGE

T.Amsathvani [1] ,T.Rusika[1], C.Mathusha[1]

Department of Sociology, University of Jaffna, Sri Lanka

**Abstract**

After the termination of three decades of war in Sri Lanka, relocated communities in the Northern Province face many challenges with regard to livelihood. This study investigates into the livelihoods challenges encountered by people of Nallinakapuram village who have been relocated alongside the coastal belt of Jaffna District. Total sample comprised of 135 families and a mixed method (qualitative and quantitative) was employed to collect the relevant data. Primary data were collected from different participants using semi- structured questionnaire, case studies, key-informant interviews and semi- structured interviews. This study utilized the secondary data too such as available literature reviews, statistics availed from Tellipalai Divisional Secretariat, and information from retrieved from the websites. Results indicate that propensity on their traditional livelihoods, distance from home to work place, lack of capital, lack of marketing facilities are the key reasons for their livelihood problems. In addition, lack of vocational training and under employment among the youth are other crucial reasons for their livelihood problems. People couldn't embark on any self-employment initiatives for their livelihood due to inadequate land size. In addition, there are 16 women headed families have been reported and their main livelihood activities are daily wage and handicraft. They faced disparities in wage compare to male daily wagers and lack of marketing facilities. Theabove said livelihood issues have created negative impacts such as poverty, child labour, drug addiction, school dropout and social disparity among the different communities. As for recommendations, government should take necessary actions to release the people's encroached land and properties, and provide them with necessary resources with vocational training to promote their livelihood activities.

**Key words:** Livelihood Challenges, Relocated people &Nallinakkapuram

**அறிமுகம்**

இலங்கையில் இடம்பெற்ற முப்பது ஆண்டுகால யுத்தத்தின் விளைவாக மக்கள் சமூக, பொருளாதார மற்றும் உள ரீதியாக பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். மக்களின் அடிப்படைத் தேவையான இருப்பிடம் சார்ந்து பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். வடமாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றமும் அது சார்ந்த வாழ்வாதாரப் பிரச்சினைகளும் தீர்க்கப்படாத நிலையிலேயே இருந்து வருகின்றது. அதனடிப்படையில் மீள்குடியேற்றம் என்பது ஒரு நாட்டில் ஏதேனும் ஒரு பாகத்திலுள்ள அகதிகளை நிரந்தர வதிவிடமின்றி வைத்து பாதுகாப்பதற்காக அவர்களை தெரிவு செய்து இடம்மாற்றுகின்ற செயன்முறையாகும் (Thomsan.J, 2017). மீள்குடியேற்றமானது மூன்று வழிமுறைகளின் ஊடாக இடம்பெறுகின்றது. அதாவது சொந்த இடத்தில் குடியமர்த்தல், அரச காணிகளில் நிரந்தரமாக குடியமர்த்தல் மற்றும் இடம்பெயர்ந்து வசிக்கின்ற இடத்திலேயே குடியமர்த்தல் இதில் நல்லிணக்கபுரமானது இரண்டாவது வழிமுறைக்குள் உள்ளடங்கும் இடமாக காணப்படுகின்றது. இதன் விளைவாக இங்குள்ள மக்கள் வாழ்வாதாரம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் வாழ்வாதாரம் என்பது வாழ்க்கைத் தேவையைப்பூர்த்தி செய்வதற்கான ஒரு மூலமாகும். நிலைத்து நிற்கக்கூடிய வாழ்வாதாரமானது தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமையும். இது இயற்கை, சமூக, பௌதீக, மானுட, நீதி மற்றும் மூலதனம் ஆகிய ஐந்து சொத்துக்களில் தங்கியுள்ளது.

யாழ்ப்பாண குடாநாட்டில் 1990 தொடக்கம் 1993 ஆண்டிற்கு உட்பட்ட காலப்பகுதியில் நிலவிய யுத்தம் காரணமாக பெரும்பலவான மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்கள் மற்றும் வேறு இடங்களில்

குடியமர்த்தப்பட்டனர். அதனடிப்படையில் தையிட்டி மற்றும் மையிலிட்டி பிரதேசத்தினை சொந்த இடமாகக் கொண்ட மக்கள் 1990 ஆண்டிலிருந்து 2006ம் ஆண்டு வரை கோணப்புலம் நலன்புரி முகாமில் வசித்து வந்தனர். பின் 2016ஆம் ஆண்டு அவர்களின் சொந்த இடத்தில் குடியேற்றாமல் தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட நல்லிணக்கப்புர கிராமத்தில் அரச காணியில் இலங்கை இராணுவத்தினரால் வீடுகள் அமைக்கப்பட்டு நல்லிணக்கப்புரம் என்ற பெயரில் 135 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டனர். இவ்வாறு குடியமர்த்தப்பட்ட மக்கள் நிரந்தர வேலையின்மை, குறைதொழில் நிலமை,வேலையின்மை, வருமானமின்மை, மூலதன வசதியின்மை, தொழிற்பயிற்சியின்மை, பரம்பரை தொழில் மீதான நாட்டம், குறை தொழில் நிலமை மற்றும் சந்தை வசதியின்மை போன்ற காரணங்களினால் இங்குள்ள மக்கள் வாழ்வாதாரம் சார்ந்த பிரச்சினைகளினை எதிர்கொண்டு வருகின்றனர். இவ் ஆய்வானது நல்லிணக்கப்புரத்திலுள்ள மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை ஆராய்வதனை நோக்கமாகக் கொண்டு காணப்படுகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

**அடிப்படை வசதி மற்றும் உட்கடடமைப்பு வசதிகள் தொடர்பானவை**

Kirupananthan. N. and Sukirtha.R (2016) என்பவர்கள் மேற்கொண்ட ஆய்வில் இலங்கையில் முல்லைத்தீவில் 1990ல் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் மீண்டும் அப்பகுதியில் மீள்குடியேற்றப்பட்டனர். இவர்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடிநீரினைப் பெற்றுக் கொள்வதில் இம்மக்கள் பாரிய சிரமங்களினை எதிர்கொள்கின்றனர். அத்துடன் இம்மக்களுக்கு சந்தை வசதிகள், சந்தைப் பேட்டைகள் அமைக்கப்படாத நிலைமையே காணப்படுகின்றது. மேலும் போக்குவரத்துப் பாதைகளும் சிரமமான நிலையில் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முனாஸ் மற்றும் மொகமட; (2015) மீள்குடியேற்றப்பட்ட மக்களிடத்தே போரினால் பெரும்பாலான கடற்கரையோர உட்கட்டமைப்பு வசதிகள் அதாவது பாதைகள், பாலங்கள்,மின் இணைப்புக் கம்பிகள், மீன்பிடிக் குடியிருப்புக்கள், மீன்பிடி உபகரணங்கள் அழிக்கப்பட்டுமீன்பிடி சமுதாயம் பாதிக்கப்பட்டு உதவி தேவைப்படுபவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாய்வுகள் இனங்காட்டுவதைப் போன்று நல்லிணக்கபுரத்திலும் மக்கள் தமது குடிநீர் தேவையினை பூர்த்தி செய்து கொள்வதில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அத்துடன் இம்மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளும் சரியான ஒழுங்கமைப்பில் இல்லாமையினால் மழைக் காலங்களில் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகின்றனர். மேலும் சந்தை வாய்ப்பின்மை, பொதுப்போக்குவரத்து மற்றும் வசதிகளின் கிடைப்பனவு (வங்கி,பாடசாலை, வைத்தியசாலை) என்பவற்றிலும் பல்வேறு தடைகள் காணப்படுகின்றன.

**வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பானவை**

Adam.A et.al (2015) என்பவர் மொசாம்பிக்கில் மேற்கொண்ட ஆய்வில் இங்கு குடியேறிய மக்கள் தம் வாழ்வாதாரங்களை மேற்கொள்வதற்கு அப்பகுதி நிலம் தரமற்றதாகக் காணப்படுவதாகவும், விவசாயம் செய்வதற்கு நீர் வசதிகள் குறைவாகக் காணப்படுவதனால் விவசாயம் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். முனாஸ் மற்றும் மொகமட் (2015) என்பவர்கள் மேற்கொண்ட ஆய்வில் மீள்குடியேற்றப்பட்ட மக்களிடத்தே போரின் தாக்கங்கள், அடையாளங்கள் தற்பொழுதும் உள்ளன. போர்க் காலத்தில் பௌதீக வளங்கள், சந்தை வலையமைப்புக்கள் அழிக்கப்பட்டமையானது குறித்த வருமானம் ஈட்டும் துறைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் இரண்டிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. திருகோணமலை மற்றும் மட்டக்களப்பில் வாழ்வாதாரச் செயற்பாடுகளில் ஒன்றாக மீன்பிடி காணப்படுகின்றது. யுத்தம் இடம்பெற்ற காலம் மற்றும் அதற்கு பிற்பட்ட காலத்திலும் கூட சில இடங்களில் மீன்பிடித்தலில் தடை காணப்படுகின்றது. இது மீன்பிடி உற்பத்தியையும், அத்தொழிலில் ஈடுபடுவோரின் வருமானத்திலும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. மீள்குடியேற்றப்பட்ட ஒட்டுச்சுட்டான் மக்களிடையே வருமானம் ஈட்டுவதற்கு தமக்கென ஒரு சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ள போதியளவு மூலதனமின்மை முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது (சுபாஜினி.உ, 2015). இவ்வாய்வுகள் இனங்காட்டுவதைப் போன்றே நல்லிணக்கப்புரத்திலும் பெரும்பாலான மக்கள் பருவ கால தொழில்களான மீன்பிடி, கூலி (மேசன், விவசாயம்) போன்றவற்றில் ஈடுபடுவதனால்

குறைதொழில் நிலமையையும் , மூலதனப் பற்றாக்குறை, தொழில் செய்யும் இடத்தின் தூரம் மற்றும் வருமானப் பற்றாக்குறையையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

**ஆய்வு முறையியல்**

**ஆய்வுப் பிரதேசம்**

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் விளைவாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் யாழ்ப்பாணமும் ஒன்றாகும். யாழ்ப்பாண மாவட்டத்திற்கு உட்பட்ட தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவானது உயர்பாதுகாப்பு வலயமாக ஆரம்ப காலங்களில் இருந்து வந்துள்ளது. இங்கு 44 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளடக்கப்படுகின்றது. இங்கு தையிட்டி மற்றும் மையிலிட்டி இதுவரையிலும் விடுவிக்கப்படாத நிலையில் அப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் நல்லிணக்கப்புரம் எனும் அரச காணியில் இராணுவத்தினரால் குடியமர்த்தப்பட்டனர். இக்கிராமமானது 2016 ஆம் ஆண்டு ஆனி மாதம் 11ம் திகதி மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இங்கு 135 குடும்பங்கள் காணப்படுகின்றன (தெல்லிப்பளை பிரதேச செயலக அறிக்கை,2018). இங்குள்ள மக்களின் பிரதான ஜீவனோபாயமாக மீன்பிடி மற்றும் கூலித் தொழில்களே அடிப்படையாகக் காணப்படுகின்றது. மேலும் குறிப்பிட்ட சில மக்களே அரச தொழில்களில் ஈடுபடுகின்றனர். இது ஒரு மீள்குடியேற்றப் பிரதேசமாகக் காணப்படுவதனால் மக்கள் தமது வாழ்வாதாரச் செயற்பாடுகளில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஆய்வு வடிவமைப்பு**

இவ்வாய்வானது பண்புசார் மற்றும் அளவுசார் நுட்ப முறைகளை பயன்படுத்தி கலப்பு முறையில் (Mixed Method) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மாதிரியும் மாதிரிப் பருமனும்**

இக் கிராமத்தில் வசிக்கும் 135 குடும்பங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.

**தரவுசேகரிப்புக் கருவிகள்**

**முதல்நிலைத் தரவுசேகரிப்புக் கருவிகள் :**அரைக் கட்டமைக்கப்பட்ட நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினாக்கொத்து (135), விடயஆய்வு (5), பிரதான தகவல் தருநருடனான நேர்காணல (1) மற்றும் நேரடி அவதானம் போன்ற முதல்நிலைத் தரவுசேகரிப்புக் கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இரண்டாம் நிலைத் தரவுசேகரிப்புக் கருவிகள் :** ஆண்டறிக்கை, பத்திரிகைகள்,பிரதேச செயலக அறிக்கை, ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளங்கள் போன்றவற்றிலிருந்து இரண்டாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டன.

**தரவுப் பகுப்பாய்வு :**பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளில் அளவுசார் தரவுகள் அட்டவணைகள் மற்றும் வரைபுகள் மூலமாக விபரண ரீதியான பகுப்பாய்விற்கும் பண்புசார்ந்த தரவுகள் கருப்பொருள் ரீதியான பகுப்பாய்வுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வு ஒழுக்கவியல்**

தெல்லிப்பளை பிரதேச செயலாளரின் அனுமதி பெறப்பட்ட பின்னரே நல்லிணக்கபுர மக்கள் ஆய்விற்குட்படுத்தப்பட்டனர். மேலும் ஆய்விற்குட்படுத்தப்பட்ட மக்களிடம் எழுத்து மூலமான அனுமதி பெறப்பட்ட பின்னரே அவர்களிடமிருந்து தரவுகள் பெறப்பட்டன. ஆய்வுச் செயன்முறையின் அனைத்துக் கட்டங்களிலும் ஆய்வு ஒழுக்கவியல் பின்பற்றப்பட்டது. ஆய்விற்காகப் பெறப்பட்ட தரவுகள் குறிப்பிட்ட ஆய்விற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டது. ஆய்விற்குட்படுத்தப்பட்டவர்களின் தனிப்பட்ட தகவல்களின் இரகசியத் தன்மையானது பேணப்படும். ஆய்விற்குட்படுத்தப்பட்டவர்களின் பங்கேற்பானது தற்காலிகமானதாகும்.

**பெறுபேறுகளும் கலந்தாராய்தலும்**

ஆய்விற்குட்படுத்தப்பட்ட நல்லிணக்கபுர மக்களின் பால்நிலை, மதம் தொடர்பான விபரங்களினை கீழ்வரும் அட்டவணை காட்டிநிற்கின்றது.

அட்டவணை 1. குடித்தொகைசார் அம்சங்கள;

| **விபரம்** | | **எண்ணிக்கை** | **tPjk;** |
|---|---|---|---|
| **பால்நிலை** | ஆண் | 144 | 40% |
| | பெண் | 217 | 60% |
| | **மொத்தம்** | **361** | **100%** |
| **மதம்** | இந்து மதம் | 217 | 60% |
| | றோமன் கத்தோலிக்கம் | 144 | 40% |
| | **மொத்தம்** | **361** | **100%** |

(மூலம்:- கள ஆய்வு வினாக்கொத்து -2019)

**தொழில் நடவடிக்கைகள் தொடர்பானவை**

நல்லிணக்கபுர கிராம மக்களின் தொழில் நடவடிக்கைகளினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

(குடும்பங்களின் தொழில் நடவடிக்கையே காட்டப்பட்டுள்ளது)

அட்டவணை 2. தொழில் நடவடிக்கைகள்

| **தொழில்** | **எண்ணிக்கை** | **வீதம்** |
|---|---|---|
| மீன் வியாபாரம் | 40 | 38% |
| கூலித்தொழில் | 35 | 26% |
| மேசன் | 30 | 22% |
| கடற்றொழில் | 10 | 7% |
| சீவல் | 6 | 4% |
| பெயின்றிங் | 3 | 2% |
| அரசாங்கம் | 1 | 1% |
| வேலையின்மை | 10 | 7% |
| மொத்தம் | | |

(மூலம்:- கள ஆய்வு வினாக்கொத்து -2019)

**அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பானவை**

அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடிநீரைப் பெறுவதற்கு அங்குள்ள மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுவருகின்றனர். ஏனெனில் குடிநீர்க் கிணறுகள் இல்லாமையால் ஏனையவர்களின் வீடுகளுக்குச் சென்றே நீரினைப் பெற்றுக் கொள்கின்றனர். மேலும் தங்களுடைய நகைகளை அடகு வைத்து சில குடும்பங்கள் சேர்ந்து குழாய்க் கிணறு அமைத்து இதன்மூலம் குடிநீரினைப் பெறுகின்றனர். மேலும் சிலர் குடிநீரினைப் பெறுவதற்கு அயல் கிராமங்களுக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுவதால் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்கின்றனர். இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் பண்புசார் தரவும் காணப்படுகின்றது. ***“இங்க தண்ணி பொதுக் குழாயின் ஊடாக வருகுது. இதில வாற தண்ணி எங்களுக்கு காணாது. சிலர் இங்க சொந்தமா***

***குழாய்க் கிணறு அடிச்சு வச்சிருக்கினம். இப்ப எங்களுக்கு பைப்பில வாற தண்ணி காணாது எண்டா அவேலிட்ட போய்க் கேப்பம். எங்களுக்குள்ள சில பிரச்சினைகள் இருக்கிறதால அவேல் எங்களுக்கு தண்ணி தரமாட்டினம். தண்ணி இல்லாமல் அண்டைக்குப் பெரும்பாடுதான் எங்களுக்கு"***(மூலம்:- விடய ஆய்வு 01). Adam.A et.al(2015) என்பவரின் ஆய்வில் மொசாம்பிக்கில் மோதல்களினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறிய மக்கள் குறைந்த அடிப்படை வசதிகளை கொண்டுள்ளனர் எனவும் மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் நீர்ப் பிரச்சினை காணப்படுகின்றது என்பதனையும் இனங்காட்டியுள்ளார். இதனடிப்படையில் மயிலிட்டி மற்றும் தையிட்டி பிரதேச மக்களை நல்லிணக்கப்புரம் எனும் இடத்தில் மீள்குடியேற்றியதனால் அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

**பொதுப்போக்குவரத்து**

நல்லிணக்கபுரத்தில் உட்கட்டமைப்பு வசதிகளான பாடசாலை, போக்குவரத்து சந்தை வசதி, வங்கி போன்றவற்றை அணுகுவதில் பல்வேறான சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பதனை களஆய்வின் நேரடி அவதானத்தின் மூலமாக அறிய முடிந்தது. இவற்றில் பொதுப்போக்குவரத்தில் அதிகமான பிரச்சினையை எதிர்கொள்கின்றனர் என்பதனை பின்வரும் நேர்காணல் எடுத்துக் காட்டுகிறது. ***"நாங்க இங்க இருந்து எங்கயும் போக வேணும் எண்டால் மாவிட்ட புரம் சந்திக்குத்தான் போக வேணும். எங்கட இடம் மயிலிட்டி அங்கதான் தொழிலுக்குப் போறானங்கள். எங்கட பிள்ளைகள் அங்க இருக்கிற பள்ளிக்கூடத்தில தான் படிக்குதுகள். இந்தத் தேவைகள நிறைவேத்த வேணும் எண்டா எங்கட தனிப்பட்ட வாகனங்களிலதான் போக வேணும் அதுக்கேத்த வசதி வாய்ப்புக்கள் எங்களிட்ட இல்ல. எங்களுக்கு எல்லா வசதியையும் ஏற்படுத்தித்தாறம் எண்டு சொல்லித்தான் இங்க கொண்டுவந்து இருத்தினாங்கள். ஆனா நாங்க தொழிலுக்குப் போறதுக்கோ, பிள்ளைகள பாடசாலைக்கு அனுப்புறதுக்கோ பஸ் வசதிகள அவங்கதான் ஏற்படுத்தித் தந்திருக்க வேணும். இதால அந்தந்த நேரத்துக்குப் போற பஸ்ச நாங்க தவற விட்டிட்டம் எண்டா எங்கட வேலைகள நேரத்துக்குச் செய்ய ஏலாமப் போயிடும்"***(மூலம்:- நேர்காணல் 01).

**மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகள்**

நல்லிணக்கபுரத்தில் வசிக்கும் மக்கள் பின்வரும் வாழ்வாதாரம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

**வேலையின்மையும் குறைதொழில் நிலையும்**

அட்டவணை 3. தொழில் நிலைமைகள்

| | மொத்தம் | ஆண் (21-30) | வீதம் | பெண் (21-30) | வீதம் |
|---|---|---|---|---|---|
| வேலையின்மை | 10 | 07 | 70% | 03 | 30% |
| குறைதொழில் நிலமை | 68 | 51 | 75% | 17 | 25% |

(%yk;:- fs Ma;T tpdhf;nfhj;J -2019)

யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட வெவ்வேறுபட்ட மீள்குடியேற்றத்தின் விளைவாக வேலையின்மையும் அது சார்ந்த குறைதொழில் நிலமையும் மக்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு மூலகாரணியாக அமைந்துள்ளது. இதனை வலுச்சேர்க்கும் வகையில் பண்புசார் தரவு அமைந்துள்ளது. ***"எங்கட இடத்தில தொழில் எண்டால் அது கடற்தொழில்தான் அத தவிர எங்களுக்கு வேற வேலை செய்யக்கூடிய வசதி வாய்ப்பும் இல்லை. கடற்தொழில் செய்யிறதுக்கு எல்லாருக்கும் வருமானம் போக்குவரத்து இல்லை.***

***பெடியங்களுக்கு படிப்பு இல்ல வேலை இல்ல அவங்கள் தங்களுக்கு என்ன என்ன வேலை கிடைக்குதோ அந்த வேலைய போய்ச் செய்திட்டு காச எடுத்து வீட்டயும் குடுப்பாங்கள் தங்களுக்கு குடிக்கவும் எடுப்பாங்கள். கூடுதலா கூலி மற்றும் மேசன் வேலைக்கு தான் போவாங்கள். இதை விட வேற வேலை வாய்ப்புக்களும் எங்கட இடத்தில இல்ல. சண்டைக்குப் பிறகு எங்கட இடத்தில நாங்கள் இல்லாததால இவ்வளவு நிலைக்கும் காரணம்"*** (மூலம்: விடய ஆய்வு 05).

**.மூலதனப் பற்றாக்குறை**

தெரிவு செய்யப்பட்ட 135 குடும்பங்களில் கடற்தொழில் மற்றும் மீன் வியாபாரம் செய்யும் 50 குடும்பங்கள் மூலதனப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் குடும்பங்களாக காணப்படுகின்றன. ஏனெனில் போருக்கு முன்னரான காலப்பகுதிகளில் கிடைக்கப்பெற்ற அளவு மூலதனம் மற்றும் வருமானம் போன்றன தற்போது குறைந்த அளவிலேயே கிடைக்கப் பெறுவதனால் மக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றனர். இதனை ஆதராப்படுத்தும் வகையில் பின்வரும் நேர்காணல் காணப்படுகின்றது.***"யுத்தத்திற்கு பின்னரும் அவ்இடம் உயர்பாதுகாப்பு வலயமாக இருக்கிறதால இவைக்குரிய தொழில்சார்ந்த மூலதானங்கள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் இவர்களுக்குரிய தொழில் மூலதனங்கள் ஆரம்பத்தில் இருந்தததைப் போல் இல்லாமையே இவர்களினால் தொழிலில் முன்னேற முடியாமல் உள்ளது. கடற்தொழில் தவிர்ந்த ஏனைய தொழில்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டாலும் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக அதில் தொடர்ந்தும் முன்னேற முடியாத சூழலே காணர்டுகிறது"***(மூலம்:- நேர்காணல் 01).

**தொழில் செய்யும் இடம்சார் பிரச்சினை**

நல்லிணக்கப்புரத்தில் குடியமர்த்தப்பட்ட மக்கள் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பல்வேறு தூரம் பயணம் செய்ய வேண்டிய நிலையில் காணப்படுகின்றனர். இந்நிலையானது மக்களின் வாழ்வாதாரத்தில் பாதமான விளைவுகளை ஏற்படுத்தி வருவதனை பின்வரும் நேர்காணல் எடுத்துக் காட்டுகின்றது. ***"தொழில் செய்யும் இடத்திற்கும் அவர்கள் வசிக்கும் இடத்திற்கும் நீண்ட தூர இடைவெளி இருப்பதால் அவர்களினால் கடற்தொழிலினை தொடர்ந்தும் செய்வதில் பல்வேறான சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். ஏனெனில்தனிப்பட்ட வாகன வசதிகள் காணப்படுபவர்களே அத்தொழிலினை ஓரளவிற்கு சிறப்பாக செய்து கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாக காணப்படுகிறது"***(மூலம்:-நேர்காணல்- 01).

**.சந்தைவாய்ப்பு தொடர்பானவை**

மக்கள் தமது சொந்த இடத்தில் குடியமர்த்தப்பட்டிருந்தால் சந்தைவாய்ப்பினை இலகுவாக அணுக முடியும். ஏனெனில் மக்கள் தொழில் செய்யும் இடத்திற்கு அருகிலேயே சந்தை வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. ஆனால் மக்கள் இங்கு குடியமர்த்தப்பட்டதன் காரணமாக சந்தை வாய்ப்பில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக கடற்தொழில் சார்ந்த வாழ்வாதாரத்தில் தங்கியுள்ள 50 குடும்பங்கள் சந்தை வாய்ப்பு தொடர்பில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதனை பின்வரும் விடய ஆய்வு எடுத்துக் காட்டுகிறது.***"எங்கட தொழில் கடற்தொழில் எண்டதால நாங்க இருக்கிற இடத்தில சந்தை வசதி இல்லை. கடலுக்கு பக்கத்தில இருக்கிற சந்தையில இருந்து ஏற்றுமதிகள் நடக்கிறது. ஆனாலும் உள்ளூர் சந்தை வாய்ப்புக்கள் இல்லாமையினால் வருமானப்பற்றாக்குறை காணப்படுகிறது"*** (மூலம்: விடய ஆய்வு- 03).

**.தொழிற்பயிற்சிகள் தொடர்பானவை**

தெரிவு செய்யப்பட்டவர்களில் 34 பேர் தொழில் பயிற்சியினை முறையான வகையில் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

அட்டவணை 4. தொழிற்பயிற்சி தொடர்பான விபரம்

| விபரம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| தொழிற்பயிற்சியை பயன்படுத்தாதோர் | 29 | 85% |
| பயன்படுத்துவோர் | 5 | 15% |
| **மொத்தம்** | **34** | **100%** |

(மூலம்:- கள ஆய்வு வினாக்கொத்து -2019)

இளைஞர்களிடையே தொழில்சார் திறன்களை மேம்படுத்துவதற்காக பல்வேறு நிறுவனங்கள் இயங்கிவரும் நிலையில்அதனை அணுகுவது தொடர்பில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாகதொழிற்பயிற்சி தொடர்பான விழிப்புணர்வின்மை, நாட்டமின்மை, போக்குவரத்துச்சார்ந்த பிரச்சினை போன்றவை இளைஞர்களின் தொழிற்றிறங்களை மேம்படுத்துவதில் தடையாக அமைந்துள்ளன.***"நல்லிணக்கபுர இளைஞர்களுக்கு போதிய தொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்ற போதும் இவ் இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி தொடர்பில் ஆர்வமும் இல்லை தாம் அடுத்த கட்டத்திற்கு போக வேண்டும் என்று ஆசையும் இல்லை. மற்றும் இவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட தொழிற்பயிற்சிகளைப் பெற்று அதில் ஒரு நிலைக்கு வரவும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்"*** (மூலம்:- விடய ஆய்வு 02).

முல்லைத்தீவில் குறிப்பாக ஒட்டிசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் யுத்தத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் வாழ்வாதாரச் செயற்பாடுகளில் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். மக்களின் வாழ்வாதார நடவடிக்கையாக விவசாயம் பெரும்பங்கு வகிக்கின்றது. இவர்களுடைய வாழ்வாதாரம் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுவதுடன் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதிவளம் போதாமை பாரிய பிரச்சினையாக உள்ளது (சுபாஜினி.உ, 2015). இங்கு குறிப்பிடுவதனைப் போன்றே நல்லிணக்கப்புர மக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் நிதிவளம் பாரிய பிரச்சினையாக இருப்பதுடன் இதற்கு மேலதிகமாக சந்தைவாய்ப்பின்மைகள், உட்கட்டமைப்புசார் வசதிகளின் கிடைப்பனவு போதாமை, குறைதொழில் நிலமை, வேலையின்மை, தொழில் செய்யும் இடத்தின் தூரம் போன்ற விடயங்கள் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் தடையாக இருந்து வருகின்றன.

**முடிவுரை**

யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை சொந்த இடத்திற்கு குடியேற்றாமல் மீள்குடியேற்றம் என்ற வகையில் இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட மாதிரிக் கிராமத்தில் குடியமர்த்தியமையினால் வாழ்வாதாரம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். பரம்பரை பரம்பரையாக கடற்றொழிலில் ஈடுபடும் மக்களை சொந்த இடத்தில் குடியேற்றாமல் விட்டதனால் தொழில்சாரந்தும் வருமானம் சார்ந்தும் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதால் இம்மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை என்பது தீர்க்கப்படாத நிலையிலேயே காணப்படும் என்பது இவ்வாய்வின் முடிவாகக் காணப்படுகின்றது. எனவே மக்களின் சொந்த இடங்களினை அவர்களிடம் கையளிப்பதன் மூலமாகவே அவர்களின் வாழ்வாதாரத்தில் மேம்பாட்டினை ஏற்படுத்த முடியும்.

**References**

Adam.A ,John.R .Owen and Deanna Kemp (2015)Households, livelihoods, and mining- induced displacement and resettlement. the extractive industries and society ,Volume 2, Issue 3, August 2015, P581-589 , Retrived from, https://www.sciencedirect.com/science/article/pii/S2214790X15000854.

Thomsan.J (2017) The Role of Resettlement in Refugee Responsibility Sharing. Global Leadership and Cooperation for Refugee series paper no.3- January- 2017. Retrived from, www.cigionline.org.

கிருபானந்தன்.ந மற்றும் சுகிர்தா.ச (2017) மீள்குடியேற்றமும் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் சவால்களும்: 1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை மையப்படுத்திய ஆய்வு. South Eastern University Arts Research Session – 2016. Retrived from, http://ir.lib.seu.ac.lk/handle/123456789/2156.

சுபாஜினி உதயராசா(2015)மீள்குடியேற்றத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள வாழ்வாதாரப் பிரச்சினைகள்:ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவினை அடிப்படையாகக் கொண்ட ஒர ஆய்வு. kalam journal. vol.IX.(1), 2015 .0f faculty of Arts and Culture,South Eastern University of Sri Lanka. Retrived from, https://www.seu.ac.lk.

தெல்லிப்பளை பிரதேச செயலக அறிக்கை- 2018